# இராணுவ தகவல்களை பத்திரிகைகளுக்கு வெளியிடக்கூடாது

## ஜெரி டி சில்வா எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகள் பற்றி எந்தவித தகவல்களையும் பத்திரிகைகளுக்கு வழங்கக் கூடாதென்று இராணுவத்தளபதி ஜெரி டி சில்வா சிரேஷ்ட படை அதிகாரிகளுக்கு பணித்திருப்பதாக 'தினமின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

பத்திரிகைகள் வெளியிடும் சில தகவல்களினால் இராணுவத்துக்கு பெரும்பாதிப்பு ஏற்படுவதாக இராணுவ தளபதி

(5-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 15 இதழ் 83

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28 – 4 – 1995

## வடபகுதி புனரமைப்பிற்கு நிதியுதவி கிடையாது

(பாரிஸ்)

பாரிஸில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கை அரசு, வடபகுதி புனரமைப்பிற்காக கோரும் நிதியை உதவி வழங்கும் நாடுகள் வழங்கமாட்டாதென கூறப்படுகிறது.

வடக்கு- கிழக்கில் மீண்டும் மோதல் வெடித்துள்ளதால் அரசு இப்பகுதிகளில் புனரமைப்பு தொடர்பாக சமர்ப்பித்துள்ள பலகோடி ரூபாவிற்கான திட்டங்களை மேற்படி நாடுகள் ஆதரிக்காதென

(6-ம் பக்கம் பார்க்க)

# ★ புலிகளின் உக்கிர தாக்குதலால்

# வவுனியாவில் மிகப்பெரியதொரு ராணுவ நடவடிக்கைமுறியடிப்பு

## படையினருககு பலத்த அடி

[வவுனியா]

வவுனியா இறம்பைக்குளம் பகுதியைநோக்கி நேற்று பெரும் எடுப்பில் இரு வழிகளில் முன்னேற முயன்ற இராணுவத்தினரின் முயற்சி விடுதலைப்புலிகளின் உக்கிர தாக்குதலினால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது. இதனால் படையினர் பெரும் இழப்புகளுடன் திரும்பவேண்டியநிலை ஏற்பட்டது'

(5ம் பக்கம் பார்க்க)

## பாரிய தாக்குதல் உடனடியாக இல்லை

[கொழும்பு]

பாரிஸ் மாநாட்டையடுத்து வடபகுதிமீது பாரிய தாக்குதலை மேற்கொள்ளும் எண்ணம் அரசாங்கத்திற்குக் கிடையாது என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸ் மாநாட்டின் பின் வடபகுதிமீது பாரிய தாக்குதலை மேற்கொள்ள படையினர் திட்டமிட்டுவருவதாக பல தரப்பினரும் கருத்து தெரிவித்துவருவதையடுத்தே அர

(5ம் பக்கம் பார்க்க)

## படையினரின் கத்திக் குத்தால் இரு தமிழர் கோரக் கொலை

(வவுனியா)

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இராணுவ அணியால் இரு தமிழர்கள் கத்தியால் குத்தி கோரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை நடைபெற்ற இக்கொடூரத் தாக்குதலில் மன்னார்வங்காலையைச்சேர்ந்த அ. ஞானமுத்து, நெடுங்கேணியைச் சேர்ந்த மா. இராமச்சந்திரன் ஆகியோரே கொலை செய்யப்பட்டவர்களாவர்.

வவுனியாவில் இடம்பெற்ற பாரிய இராணுவநடவடிக்கைகளில் பங்கு பற்ற வந்த இந்த படையணியே இவர்களைக் கோரமாகக் குத்திக்கொலை செய்துள்ளது. இவ்விரு தமிழரின் உடல் பகுதிகள் முழுவதிலும் கத்திக்குத்து நடந்துள்ளதால் இருவரும் ஸ்தலத்திலே

(6ம் பக்கம் பார்க்க)

## வவுனியாமோதலில் 3 இராணுவம்பலி

(வவுனியா)

வவுனியாவில் நேற்றுக்காலை முன்னேறமுயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஐவர் படுகாயம்

(6ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் மோதல்கள் தீவிரமடைகின்றன

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல்கள் தீவிரமடைந்து வருவதாக சகல பகுதிகளிலுமிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றைய தினம் கிழக்கில் மட்டகளப்பு, திருமலை, அம்பாறையிலும் வடக்கில் வவுனியா. மன்னாரிலும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இம்மோதல்கள் பெருமெடுப்பில் நடந்துள்ளன.

(5ம் பக்கம் பார்க்க)

## 2 தமிழ் பொலிஸார் மட்டக்குளியில் கைது

(கொழும்பு)

இரு தமிழ் இளைஞர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததாக பதவியிலிருந்து நீக்கப்பட்ட இரண்டு தமிழ்ப்பொலிசாரை மட்டக்குளியில் வைத்து இரகசியப் பொலிசார் கைதுசெய்துள்ளனர் என்று வெரித்நாஸ் தெரிவித்தது.

இவர்கள் ஆதரவுகொடுத்த இந்த இரு இளைஞர்களும் தீவிரவாத செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படுவதாலேயே இந்த இரண்டு தமிழ்ப் பொலிசாரும் கைதுசெய்யப்பட்டனர் என்றும் வெரித்தாஸ்

(6ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கடலில் வைத்து படகுகளுடன் இருமீனவர் கைது

[வடமராட்சி[

வடமராட்சி ஆதிகோவிலடி கடலில் கடற்படையினர் இரு மீனவர்களையும் அவர்களின் மீன்பிடிப் படகுகளையும் மற்றும் உபகரணங்கள் சகிதம் காங்கேசன்துறைப் பகுதிக்கு கொண்டுசென்றுள்ளனர்.

வெற்றிலைக்கேணி பகுதியிலிருந்து நேற்றுக்காலை 7-10மணியளவில் பீரங்கிப் படகில்வந்த படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆதிகோவிலடிக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற

(5ம் பக்கம் பார்க்க]

## கடற்படை தாக்குதல் ஒருவர் படுகாயம்

(நெல்லியடி)

கடலில் ரோந்து சென்ற கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் மீனவர் ஒருவர் தொடையில் படுகாயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவ மனையிலிருந்து அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனு வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

(5ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி மீதான தடைகளை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

(கொழும்பு)

வடபகுதியில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளபொருளாதாரத்தடை, மீன்பிடித் தடை, கிளாலியால் போக்குவரத்து செய்வதற்கான தடையை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென்று 'மேர்ஜ்' அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

'மேர்ஜ்' அமைப்பு மேலும் தெரிவிக்கையில்; அரசாங்கம் தான் மேற்கொள்ளவிருக்கும் அரசியல் தீர்வை மக்கள்முன்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**'அதிபராகி'**

இந்த வார வீரகேசரியில் பிரசுரமாகியுள்ள 'அதிபராகி' சிறுகதை வாசித்தீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல் அக்கரைச் சீமையில், 50/-

(சி-1466)

**செல்வம் ஆட்ஸ்**

றபர்சீல் வேலை தெரிந்தவர் களும் பழக ஆர்வமுள்ளவர் களும் அச்சுக்கோப்பாளர் களும் உடன் நேரில் வரவும் ''செல்வம் ஆட்ஸ்'' சே. கே. எஸ். வீதி சுன்னாகம்.

(சி-1467)


## குளத்தில் மூழ்கி வயோதிபர் மரணம்

(பளை[

குளத்தில் குளிக்கச் சென்ற முகமாலையைச் சேர்ந்த ஆ. சவரிமுத்து என்பவர் [வயது 13) குளத்தில் மூழ்கியபோது அவரைக் காப்பாற்றச் சென்ற கொழும்புத்துறையைச் சேர்ந்த தாசீஸ் என்ற வயோதிபர் குளத்தில் மூழ்கி மரணமானுர். .150

## இலவச விவசாய பயிற்சி நெறி

(பண்டத்தரிப்பு)

சுன்னுகம் மருதனுர்மடத்திலுள்ள வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாய நிறுவனம் இலவச விவசாய பயிற்சி நெறியொன்றை அடுத்த மாதம் தொடக்கம் ஆரப்பிக்கவுள்ளது. ஒரு வருட கால விவசாய டிப்பிளோமா பயிற்சிநெறி' இரண்டு வருடகால விவசாய டிப்பிளோமா பயிற்சி நெறி என இரு பயிற்சி நெறிகள் இந்த நிறுவனத்தில் நடாத்தப்பட விருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. 72


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# 20 மனித உரிமை அமைப்புகள்ஒன்றிணைந்தன

(கொழும்பு)

இலங்கையில் உள்ள 20 மனித உரிமைகள் அமைப்புக்கள், தாம் ஒன்றிணைந்து இயங்கப் போவதாக அறிவித்துள்ளன.

இந்தக் கூட்டு அமைப்பில், நாட்டில் இயங்கும் மற்றைய அமைப்புக்களும் இணைந்து கொள்ளலாம் என்றும், இலங்கையில் நடைபெறும் மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய ம்பசவங்களை வெளிப்படுத்தும் நோக்கமாக, ஒரு மாதாந்த வெளியீடு ஒன்றையும் வெளியிடுவதற்குத் தீர்மானித்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனுதிபதி சந்திரிகா ஆட்சிக்கு வந்தபோது பெருமளவு குறைந்திருந்த மனித உரிமை மீறல் நடவடிக்கைகள், தற்போது அதிகரித்து வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ம சி

## நவாலி மயூரன் குடியிருப்பில் மக்கள் அடிப்படை வசதிகளின்றி பாதிப்பு

[ஆனைப்பந்தி]

நவாலி மயூரன்குடியிருப்பில் வசிக்கும் தீவக மக்கள் அடிப்படை வசதிகளின்றி அல்லற் படுகின்றனர்.

குடியிருப்பில்உள்ள அறுபது குடிசைகளும் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் மழை பெய்யும் நேரங்களில் மக்கள் குடிபெயர்ந்து அருகில் உள்ள அம்மன் கோவிலில் தஞ்சமடைகின்ற அவல நிலை காணப்படுகின்றது.

மேலும் குடிநீர் பெறுவதிலும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் சுகாதார மருத்துவ வசதிகளும் உரியவாறு கிடைப்பதில்லை எனவும் கூறப்படுகிறது.

குடியிருப்பின் ஆரம்பகாலத்தில் அதனை நிர்வகிக்கும் நிறுவனத்தினுல் ஒரு சிலபொருட்

(5ம பக்கம் பார்க்க)

## ச.ச. நிலையம் ஒன்றிய கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட்ட சன சமூக நிலையங்களின் ஒன்றியக் கூட்டம் பருத்தித்துறை தம்பசிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில்எதிர் வரும் 30ம் திகதி காலை 9மணிகசு தலைவர் திரு. வி. சேதுநாயகம் தலைமையில் நடைபெறும். 52

## கோழிகளுக்கு நோய் தடுப்பூசி

(உடுவில்)

1995 ஆம் ஆண்டுக்கான முதலாம் கட்ட கோழிக் கொள்ளை நோய்க்கான தடுப்பூசி ஏற்றல் தற்போது வலிகாமம் வடக்கு கால்நடை வைத்தியர் அலுவலகத்தினரால் மேற்கொள்ளபபட்டு வருகின்றது,

வலிகாமய வடக்கு வலிகாமம் தெற்கு பிரதேசங்களில் உள்ள கோழிப்பண்ணையாளர்களும், கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோரும் தவருது இத்தடுப்பூசிகளை கோழிகளுக்கு போட்டுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். - 106

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–04–28**

வெள்ளி இரவு

8-02 - கலைமஞ்சரி நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம், அறிமுகமாவது விவசாய விரிவுரையாளர் மு. கந்தசாமி எழுதிய ''ஒருங்கிணைந்தபீடைக் கட்டுப்பாட்டு முகாமைத்துவம்'' என்னும் நூல் அதனையடுத்து சிறுகதை - அ மதிவதனி எழுதிய ''நினைவே நிஜமாக'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை-ஆர்த்தி எழுதிய ''புதிய பாய்ச்சல்,'

8-20 - கணப்பொழுது - சி. கண்ணம்மா எழுதிய ''லெப்ரினண்ட்நித்தி''

8-30 - செய்திகள்

8-40 - சமகாலப்பார்வை

8-50 . ஏர்முனை - நிகழ்ச்சியில் ' எமது உற்பத்தியில் வெள்ளைச்சம்பா'' சித்திரம்.

**1995–04–29**

சனி காலை

7-02 - மாவீரவணக்கம்

7-15 - நீங்சள் கேட்டவை

7-30 - செய்திகள்

7-35 - பத்திரிகைச் செய்திகள்

7-40 - நீங்கள் கேட்டவை

நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–04–28**

வெள்ளி மாலை

5-01 - சிந்தனைச்சிதறம்

5-02 எழுச்சிகீதம்

5-10 - புதியவை

5-15 - கனநேரக் காவியங்கள்

5-30 - மண்ணின் குரல்

5-40 - நேயர் கடிதங்கள்

5-45 - வெற்றிச்சுவடுகள்

6-00 - சிந்தனைக்குச் சிலவினுடிகள்

6-02 - நாடகம்

6-15 -விளையாட்டுச்செய்திகள்

6-20 - என் தெரிவு

6-30 - நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**வெள்ளி விருந்து**

## கடன்பட்டார் கவலை எளிதிற் போகுமா?

சரீரத்தின் பொருட்டாவது, தருமத்தின் பொருட்டாவது, யாவரும், தங்கள் தங்கள் வரவுக்கேற்ப, மட்டாகச் செலவு செய்தல் வேண்டும். வரவுக்கு மேலே செலவு செய்யப் புகுவோர் கடன் படத் தலைப்பட்டுப் பெருந துன்பத்தையும் அவமானத்தையும் அடைவர்.

மனிதர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் எல்லாவற்றிலும் கடனுல் உண்டாகும் துன்பத்தின் மிக்க துன்பம் யாதொன்றும் இல்லை. கடன் கொடுக்கிறவனைத் தாயைக் கண்டாற்போலப் பேரானந்தத்தோடு கண்டு அவனிடத்தே கடன் பட்டவர், பின்பு அவன் எதிர்ப்படும்போது பேயைக் கண்டாற்போலப் பெரும் பயத்தோடு கண்டு நடுநடுங்கி ஒளிப்பிடம் தேடி ஓடுவர்.

சுபாசுப கருமங்களிலே பிறர் செலவு செய்வதைப் பார்த்து, தாங்களும் அப்படியே செலவு செய்யாதொழிந்தால் தங்களுக்கு அவமானம் என்று எண்ணி, கண்ணை மூடிக் கொண்டு, அகப்படுமட்டும் கடன்பட்டுச் செலவு செய்கிருர்கள். இவர்கள் அறியாமை இருந்தபடி என்னை!

- ஆறுமுகநாவலர்

# சுதந்திரப் பறவைகள் நாளை வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான சுதந்திரப் பறவைகள் மாசி, பங்குனி, சித்திரை மாத இதழ், நாளை 29ம் திகதி வெளிவருகிறது.

பெண் கடற்புலிகளின் மற்றுமோர் சாதனை, நமது பெண்களுக்கு ஒரு நாள் (ஆசிரியர் தலையங்கம்), பொருளாதார நிர்வாகம் பெண்கள் கையில் வரவேண்டும், சிரமங்களைப் பகிர்ந்துகொள்ள, சேவகம் செய்ய ஒரு தோழி, யாழ்ப்பாணத்துப் பெண்களின் கல்விப் பாரம்பரியம், சுதந்திரத்தைத் தேடி, வெளியிலே நெருப்பு வரட்டும், நாளையும் கட்டுமரமேறி போன்ற விடயதானங்களுடன், சுதாமதி எழுதிய வா தோழி மீண்டும் நடக்கத் தொடங்குவோம் என்ற கவிதையையும் தாங்கி இந்த ஏடு வெளிவருகின்றது. ரி

## கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

வலி தென் மேற்கு சன சமூக நிலையங்களின் சமாஜம் எதிர் வரும்மேதின ஊர்வலத்தில் முழு அளவில் பங்கு பற்றுவதென்று தீர்மானித்துள்ளது. இப் பகுதியிலுள்ள சகல சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களையும் மேதின ஊர்வலத்தில் தவருது பங்கு பற்றுமாறு மேற்படி சமாஜத்தின் தலைவர் திரு. வை. செகராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். 72

★ மாணவர் அமைப்பு நடத்திய

## க. பொ. த. (உ) மாணவருக்கான வதிவிடக் கல்வி கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான இரு வதிவிடக் கல்விக் கருத்தரங்குகள் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் கல்விச் சேவையினரால் நடத்தப்பட்டன:

கடந்த 20-ம் திகதி தொடக்கம் 23-ம் திகதி வரை நான்கு நாட்கள் மன்னுர் மாவட்ட மாணவர்களுக்காக ஆண்டான் குளம் அ த. க. பாடசாலையிலும்

23-ம் திகதி தொடக்கம் 25-ம் திகதி வரை மூன்று நாட்கள் கிளிநொச்சிமாவட்ட மாணவர்களுக்காக கிளி/மத்திய கல்லூரியிலும் இக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன

இரண்டு மாவட்டத்திலும் இருவேருன போதனுசிரியர் குழுக்களின் உதவியுடன் இக் கல்விக் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு போதனுசிரியர் குழுவிலும் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கற்பித்தல் தேர்ச்சி கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள், யாழ். மாவட்ட தனியார் கல்வி நிலையங்களின் பிரபல ஆசிரியர்கள் போன்ருேர் பங்கெடுத்தனர். -ரி

## தமிழீழ நிர்வாக சேவையாளர் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கிளாலிக்கடலில் படகு விபத்தில்சாவடைந்த வன்னி முல்லை மன்னார் மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளரும் அரசியல் துறையின் வன்னி, முல்லை' மன்னார் நடுவகப்பணியகப் பொறுப்பாளருமான மேஜர் செந்தமிழ் (ஈசன்) அவர்களின் வித்துடலுக்கான அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இன்று காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளதால் சகல தமிழீழ நிர்வாக சேவையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிருர்கள்.ரி

## புலமைப் பரிசில் நிதியம்

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் புலமைப் பரிசில் நிதியம் ஒன்றை அண்மையில் ஆரம்பிததுள்ளது,

இந் நிதியம் சங்க எல்லைக்கு உட்பட்ட 24 பாடசாலைகளைச் சேர்ந்த 24 மாணவர்களுக்கு இதன் மூலம் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அல்லது தமிழீழ இளநிலைத்தேர்வில் ஆகக் கூடிய புள்ளி பெறும் ஒவ்வொரு பாடசலையின் மாணவருக்கும் இப் பரிசில் வழங்கப்படும். 154

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலயம் 1கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த முதன்மை ஆசிரியர்களுடனை கலந்துரையாடல் இன்று28ம் திகதி காலை 9-00 மணிக்கு கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் என்றும் இதி சகல முதன்மை ஆசிரியர்களையும் தவருது கலந்து கொள்ளும் வண்ணமும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்'.


**அச்சுக்கோப்பாளர் தேவை**

உடனே நேரில் வருக.

ஆனந்தா அச்சகம்,

226, காங்கேசன் துறைச் சாலை, யாழ்ப்பாணம் (ஏ-4898)

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயுதாக்ஷியம்பிகா சமேத காயா ரோகணேஸ்வர ஆலய [திருநெல்வேலி சிவன்கோவில்]

**பூங்காவன உற்சவ விழா**

30-04-95 ஞாயிற்றுக்கிழமை மாலை 7-00 மணி.

ஆலய உர்சவத்தின்போது நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டி பரிசளிப்பும், தொடர் சமயச் சொற்பொழிவாற்றிய

"தமிழருவி" த. சிவகுமாரன்

அவர்களுக்கு

பட்டமளிப்பும், கௌரவமும்

ஆலய வழிபடுவோர் சபைத் தலைவர்

திரு. சி. நாகராசா

தலைமையில் நடைபெறும்.

"கம்பவாரிதி" இ. ஜெயராஜ்,

திரு. ஆறு திருமுருகன்

ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

— தேவஸ்தானம்

அன்பளிப்பு :

ஆறுமுகம் சிற்பாலயம். திருநெல்வேலி.

(ஏ-4897)

நல்லூர் கிளை நூலகம்.

## மணிவாக்கு

ஒரு மனிதன் தினம் கொஞ்சம் சங்கீதம் கேட்கவேண்டும்; ஒரு நல்ல கவிதையைப் படிக்கவேண்டும்; சிறந்த ஓவியத்தைப் பார்க்கவேண்டும்; முடிந்தால் அர்த்தத்தோடு சில வார்த்தைகள் பேசவேண்டும்.

— கெதே

## நமது நோக்கு

### அதிகாரம் யார் கையில்?

"இராணுவக் காரணங்களுக்காகப் பொருளாதாரத் தடை மீண்டும அமுல் செய்யப்படுகின்றது. இதனுல் மக்கள் பாதிப்படைவர் என்பது உண்மை!" என ஜனுதிபதி சந்திரிகா ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியிற் குறிப்பிட்டிருக்கிருர்.

இதிலே இரண்டு முக்கிய விஷயங்களை நாம் கவனிக்கவேண்டும்.

ஒன்று — பொருளாதாரத் தடை இராணுவக் காரணங்களுக்காகவே அமுல்செய்யப்படுகின்றது. மக்கள் நலன்களை விட இராணுவ நலன்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

இரண்டு— போர்முயற்சிகளுக்கான பொருட்களைத் தடை செய்வதன் மூலம் தீவிரவாதம் ஒழிக்கப்படும் எனக் கூறி வந்தார்கள். ஆனல் தடைகள் பொதுமக்களைப்பாதிக்கின்றன என்ற உண்மை ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

அது மாத்திரமல்ல — மேலும் அதிர்ச்சி தரும் செய்தியொன்றையும் அப்பேட்டியில் வெளியிட்டிருக்கிருர்.

"தடையற்ற பொருட்களைக்கூடக் கொண்டு செல்ல இராணுவம் அனுமதிக்கும் என உத்தரவாதமளிக்க முடியாது!"

தனது அதிகார வரம்பு எத்தகையது என்பதை வெளிப்படையாகவே நாட்டு மக்களுக்குக் கூறியது வரவேற்கத்தக்கது.

இராணுவத்தினரைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் இயலாமையை ஜனுதிபதி ஒத்துக்கொள்கிருரா?

போர் என்பது இந்த நாட்டில் மட்டும் நடைபெறும் புதுமையான காரியமன்று.

ஏனைய நாடுகளில் அரசியல் தலைவர்கள் எவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பதை நாம் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும்.

இரண்டாவது உலகப் போரின்போது பிரித்தானியப் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சில் கூறியது என்ன?

"போர் என்பது மிகவும் பொறுப்பான காரியம்; படைத்தளபதிகளிடம் மாத்திரம் விட்டுவிடக்கூடிய காரியமல்ல!"

(The war ts too Serious a business to be left to the Generals.)

மக்களின் பாதுகாப்புடன் தொடர்பான காரியங்களுக்கு நாட்டின் உயர் பதவி வகிப்பவர்களே உத்தரவாதம் அளிக்க வேண்டும்!

# சந்திரிகாவுடன் முரண்பாடு பல கட்சிகளும் பிரியலாம்

(கொழும்பு)

ஜனுதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்குள் அபிப்பிராய வேறுபாடுகள் மற்றும் உட்பூசல்கள் தலைதூக்கியுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும்தெரிவிக்கையில்; உத்தேச அரசியலமைப்புச்சீர்திருத்தம், இனப்பிரச்னை தீர்வுவிடயம் தொடர்பாக தம்மை கலந்தாலோசிக்காமல் ஒருதலைப்பட்சமாக அரசாங்கம் முடிவெடுப்பதாக திருமதி ஸ்ரீமானி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) அதிருப்தி தெரிவித்துள்ளது.

தாம் இவ் அரசாங்கத்தில் முக்கியமான ஒரு பிரிவாக உள்ளபோதும் முக்கியமான முடிவுகள் எடுக்கும்போது தம்மை ஜனுதிபதி சந்திரிகா கலந்தாலோசிப்பதில்லையெனவும் பேச்சுவார்த்தைகள் போன்ற விடயங்களிலும் தம்மைத் திட்டமிட்டு புறக்கணிப்பதாகவும் இக்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

அரசியலமைப்பு மாற்றம் போன்ற விடயங்களில் ஜனுதிபதிக்கு உதவ நாம் தயாராக இருந்தபோதும் ஜனுதிபதி தம்மை புறக்கணிப்பதகவும் தமிழ்க்கட்சிகளுக்கு வழங்கும் முக்கியத்துவம்கூட தமக்கு வழங்கப்படுவதில்லை எனவும் இக்கட்சியினர் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை கிழக்குநிலைமை குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனுப் எம். எச் அஷ்ரப் ஜனுதிபதி சந்திரிகாவுடன் முரண்பட்டுள்ளார். ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி தொடர்பாக மலையக மக்கள் முன்னணி தலைவர் பி சந்திரசேகரன் அதிருப்தி வெளியிட்டிருப்பதும் நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளதாக விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

க-சி

## பலதும் பத்தும்

### தலை முடி !

அறம் தவறுவதால் அரச முடிகள் உருளுவதை வரலாற்றில் படிக்கிருேம். அதே போல...... சுகாதாரம் பேணத் தவறுவதால் தலையிலுள்ள முடிகள் (தலை மயிர்) பல உதிர்கின்றன ஒவ்வொருவர் தலையிலும் சராசரியாக ஒரு லட்சம தலைமுடிகள் உள்ளனவாம். ஒவ்வொன்றின் அடிக்கும் இரத்தக் குழாய்கள் உணவை எடுத்துச் செல்கின்றன.

புரதச் சத்துள்ள உணவால் அவை பொலிவுடன் பிறர் கண்ணைக் கவரும் விதத்தில்... காணப்படுகின்றன மாதத்தில் அரை அங்குலம் வளருகின்றன.

ஆனல்... சிலருக்கோ முடி உதிர்வது பற்றிக் கவலை. தினசரி 80 முதல் 100 வரையிலான முடிகள் உதிர்வது இயற்கையான நிகழ்ச்சி. எனவே... இது பற்றிக் கவலைப்பட்டால் மேலும் அதிகமாகவே உதிர்ந்துவிடுமாம்! சிலவகை நோய் காரணமாக... அளவுக்குமீறி உதிர்ந்தால் மாத்திரமே மருத்துவ ஆலோசனை பெறப்படவேண்டும்!

— மயூரன்

## இராசி பலன்

28 04-1995

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு சித்திரை—15)

சதுர்த்தி இரவு 10.06வரை ரேவதி மாலை 5-55 வரை அமிர்தயோகம் இராகு காலம் காலை 10-28 முதல 11-58 வரை சுபவேளை மாலை 5-58 முதல் 7-28 வரை, கரி நாள்:

மேடம்: குடும்பபகை, தொழில் நஷ்டம் அலைச்சல்.

இடபம்: அதிகவாய்ப்பு, பிறர் உபதேசம், காரியசித்தி.

மிதுனம்; பிரயாசமிகுதி, சுபகாரியம் பயணநன்மை,

கடகம்; மிதமானவருவாய் வாக்குப்பகை வேண்டாத உறவு.

சிங்கம்: விரோத உணர்வு அடம்பிடித்தல், பணமுடை.

கன்னி: இனசன மகிழ்ச்சி, விருந்தோம்பல் தெய்வீக செலவு.

துலாம்: விவேகமான செயல் பெருமையாகபேசுதல், முயற்சி வெற்றி.

விருச்சிகம்: தந்தையரர் தன்பம் அமைதியின்மை சுப விரயம்.

தனுசு: குறைகேட்டல், ஏமாற்றம் தொழில் வெறுப்பு.

மகரம்: பிறர் உதவி, தான தர்மம், இலட்சிய கனவு.

கும்பம்: முரண்பாடு, பகைவர் கெடுதி, மனச்சோர்வு.

மீனம்: வாதத்திறமை தொழில் சிறப்பு. பணவரவு.

- ஜோஸ்யர்

# வவுனியா தடை முகாம்களில் பயணிகள்மீது பலத்தகெடுபிடி

(வவுனியா)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகள் வவுனியா தடை முகாம்களில் வைத்துப் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகக் கொழும்பில் இருந்து வந்த பயணிகளில் பலர் தெரிவித்தனர்

இது பற்றி அவர்களில் ஒருவர் தெரிவிக்கையில், கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகள் அனைவரும், வயது வேறுபாடின்றி வவுனியாச் சோதனைச் சாவடிகளில் பல மணி நேரம் சோதனை என்ற பெயரில் தடுத்து வைக்கப்படுகின்றனர். அரசினுல் தடை நீக்கப்பட்டிருக்கும் பொருட்களைக்கூடத் தம்முடன் எடுத்து வருவதற்கு, இத்தடை முகாம்களில் அனுமதிக்கப்படுவதில்லை இப்பொருட்கள் இராணுவத்தினரால் பறித்து வைக்கப்படுகிறது.

இத்தடை முகாம்களில் சோதனையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினர், பயணிகளுடன் கடுமையாக நடந்து கொள்கின்றனர். இளைஞர், யுவதிகள் இத்தடை முகாம்களில் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

152 சி

# ஜனுதிபதியின் சிபார்சினுல் சம்பள ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

ஜனுதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சிபார்சின்பேரில் சம்பள ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களின் சம்பள அமைப்புப் பற்றி இந்த ஆணைக்குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

முன்னுள் அமைச்சுச் செயலாளர் ரி சி. பெரேரா ஆணைக்குழுவுக்குத் தலைமை தாங்குகின்ருர்.

வாழ்க்கைப் படி, விசேட படி என்பவை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அரசாங்கத்தின் நிதி வளங்களுக்கு அமைய, பொருத்தமான சிபார்சுகள் ஆணைக்குழுவினுல் முன்வைக்கப்படும்.

இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் டபிள்யூ. குணசேகர, கல்வி, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் என். டி. வி. பீரிஸ், ஊழியர் சம்பளக் கோப்புத் தலைவர் — சிறில் கமகே, சத்திர சிகிச்சை நிபுணர் தயாசிறி பெர்னுண்டோ இலங்கை வங்கித் தலைவர் ராஜன் ஆசீர்வாதம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத் தலைவர் ரி. ஏ. எம் தெரணிகல ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

கே ரி

# 20 ஆயிரம் மீனவ குடும்பங்கள் மீன்பிடித்தடையால் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் இருபதிஞயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர் குடும்பங்கள் கடல் வலயத் தடைச் சட்டத்தால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்களென யாழ். மாவட்ட கடல் தொழில் விரிவாக்க செயலக புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது அரசினுல் அண்மையில அமுலபடுத்தப்பட்ட கடல் வலயத் தடைச்சட்டத்தினுல் கடல் தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர் குடும்பங்கள் வருமானம் எதுவுமின்றி மிமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன கடற்படையினரின் கெடுபிடிகளால் மீனவர்கள் கடலில் சென்று தொழில்புரிய முடியாதுள்ளது. பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்ளுக்கு வழங்கப்பட்டுவந்த நிவாரணக் கொடுப்பனவுகளும் ஒழுங்காகக் கிடைப்பதில்லை.

இதனுல் யாழ். மாவட்டத்தில இருபதிஞயிரத்துக்கும் அதிகமான மீனவர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அப்புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

-162-சி

## இன்று

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துப்பளை தெற்கு திருவள்ளுவர் சன சமூக நிலைய தமிழொலி மாணவர் மன்றத்தின் 4வது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும இன்று 28ம் திகதி சன சமூக நிலைய முன்றலில் நடைபெறுகின்றது. வடமராட்சி கிழக்கு மேலதிக அரசாங்க அதிபரும் பிரதேச செயலருமான திரு. எ. சிவசுவாமி விழாவிலே பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிருர்.

52

# கொத்து ரொட்டி தயாரிப்பாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கொத்து ரொட்டி தயாரித்து விற்பனையில் ஈடுபடுவோர் உணவு நிலையங்களுக்கு முன்பாகவும், வீதியோரமாகவும் அவற்றைத் தயாரித்து விற்பனை செய்வது எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாருக வீதியோரங்களில் இவற்றைத் தயாரிப்பதினுல் கொத்து ரொட்டியில் வீதித்தூசிகள் காற்றேடு கலந்துவந்து சேர்வதற்கு அதிகளவு வாய்ப்புகள் உண்டு. இதனைக் கருத்திற்கொண்டு, கொத்து ரொட்டித் தயாரிப்பில் ஈடுபடும் சகல உணவு நிலைய உரிமையாளர்களும உடனடியாக தமது கொத்து ரொட்டி தயாரிப்பு இடத்தை மாற்றம் செய்து, சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்காத நிலையில் அதனை ஆக்குமாறு தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்,

இதனை மீறுவோர் மீது 1995 ஆம் ஆண்டின் 01 எண் தமிழீழ உணவுச் சட்டத்தின் 01ஆம் பிரிவின் (02) ஆம் உட்

(5ம் பக்கம் பார்க்க)

அஞ்சி அஞ்சி சாவதற்கா நாம் பிறந்தோம் - அடிமைத் தளையொடித்து விடுதலையை நாம் பெறுவோம்!

# "மேதினம் ஓர் வரலாறு படைக்கும் நாளாக கொண்டாடுவோம்!"

## ப. தெ. வ. அ. கூ. சங்க சமாசம்

(யாழ்ப்பாணம்)

மே தினம் ஓர் வரலாறு படைக்கும் நாளாகக் கொண்டாடுவோம். என்று வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் சமாசம் விடுத்துள்ள மேதின செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அச்செய்தியில மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழீழத்தில் வாழும் மக்களின் நிலை பற்றி உலக நாடுகள் மிகவும் விழிப்பாக அவதானிக்கும் காலம் இந்நேரம் இலங்கையில் ஓர் புறத்தில் ஓர் இன மக்கள் ஒடுக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, உயிர்வாழ்வதற்கான அடிப்படை வசதிகளற்று, இருந்த நிலத்தை இழந்து, வாழ்ந்த உறைவிடத்தை இழந்து உயிர்வாழ்வதற்கான உணவுப்பண்டங்கள் கிடைக்காத நிலையில் தமிழீழ மண்ணில் பல பெறுமதிமிக்க இழப்புகளின் மத்தியிலும் இலட்சிய உணர்வோடு பல அரிய அர்ப்பணிப்புகளைச் செய்துகொண்டு வாழும் மக்களைக் கொண்ட தமிழீழ நாடு இது ஒரு தனிநாடு.

இந்த நாட்டில் ஒரு மே தினம். இம் மே தினத்தின் முக்கியத்துவம் சகலரும் அறிந்ததே இந்த மண்ணில் வாழும் மக்கள் ஒவ்வொருவருமே சாதி, மதம்: பால், முதலாளி தொழிலாளி என்ற வேறுபாடின்றி அனைவருமே அனைத்து ஒடுக்குமுறைகளுக்குள்ளான நிலையில் இருந்து விடுபட ஒரே கொடியின் கீழ் அலை அலையாக அணிதிரண்டு எம்மை ஆக்கிரமிக்கும் தென்னிலங்கை அரசுக்கும், உலக நாடுகளுக்கும் எமது தேவையையும், எமது உணர்வுகளையும் வெளிக்காட்டுவோம்.

சமாதானப் பேச்சுக்கள் பலவற்றைக் கண்ட மக்களாகிய நாம் அதற்கு ஆதரவாளர்களே. ஆனால் இப்பேச்சின் போர்வையில் மிகப்பாரிய தாக்கத்தை இன்னமும் வேற்று நாட்டவர் மேற்கொள்ள இடமளிக்க முடியாது இவை தெளிவாக எமது மே தினம் மூலம் தெரியவைப்போம்.

எமது வளம் நிறைந்த நாட்டில் எமக்கான தாயகத்தை நாமே அமைப்போம் மூலவளமும், மூலதனமும் மூளைவளமும் நிறைந்தது தான் தமிழீழ பிரதேசம். அதை முறையாக பயன்படுத்தி அனைத்து ஒடுக்குமுறையையும் உடைத்தெறிவோம்.

ஒரு தலைவரின் பாதையில் ஒரே கொடியின் கீழ் ஒரு நாட்டு மக்கள் அனைவரும் திரண்டெழுந்து உணர்வோடும், உரிமையோடும் மே நாளைக் கொண்டாடும் ஓர் நாடு உலகிலே எமது நாடாகத்தான் இருக்க முடியும். இவ் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் இந்த மண்ணில் வாழும் ஒவ்வொருவரும் கலந்து தமக்குரிய பொறுப்புக்களை உணர்ந்து செயல்பட்டு எமது உரிமைகளை வென்றெடுக்க அலை அலையாக அணி அணியாக மேதின நன்நாளில் ஒன்றுகூடி எரிமலையென எமது பிரச்சனைகளை உலக நாடுகளுக்குத் தெரியவைக்க வேண்டும். இதுவே எமது இக்கால தேவை என்பதை உணர்ந்து இந்நிகழ்வை ஒரு வரலாறு படைக்கும் நிகழ்வாக மாற்றிக் கொள்வோமாக. (ரி)

## பிரெஞ்சுடாக்டர் பயணம்

(நெல்லியடி)

மந்திகை மருத்துவ மனையில் சுமார் 8மாத காலமாக சத்திர சிகிச்சை நிபுணராகக் கடமை புரிந்த, பிரெஞ்சு வைத்தியக் குழுவைச் சேர்ந்த டாக்டர் அலன்கரோ பிரான்சுக்கு சென்றுள்ளார்.

இவரது இடத்திற்கு அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த வைத்திய நிபுணர் பணியாற்றவுள்ளார். 190-ம

# 'குகை' திருடியவர் காவல்துறையால் கைது

(ஆனைப்பந்தி)

கிளாலி இறங்கு துறையில் சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான பொருளை திருடிக் கொண்டு வந்தவர் காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டார்

யாழ் நகரை சேர்ந்த ஒருவர் பவுண் உருக்கப் பயன்படும் குகை, எனும் சாதனத்தை திருடிக் கொண்டு வந்தவர் என்றும் அயல் வீடொன்றில் இருந்த போது கடந்த செவ்வாய் இவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காவல் துறையினர் இவரை கைது செய்யச் சென்ற போது இவர் உடைத்த போத்தலினால் தன்னைதானே குத்த முற்பட்டதாகவும் அதனைத் தடுத்த உபபரிசோதகர் தரத்திலான காவல்துறையினர் ஒருவர் கையில் வெட்டுக் காயத்திற்கு இலக்காகியதாகவும் கைது செய்ய பட்ட இவர் தற்போது தடுப்புக் காவலில் உள்ளதாகவும் யாழ் காவல நிலையத்தினர் தெரிவித்தனர் 101-சி

ஐ. தே. க. ஆட்சிகாலத்தில்

# ஆட்கள் காணுமல்போன சம்பவங்களில் தொடர்புடையவர்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

அனுராதபுர மாவட்டத்தில் ஆட்கள் காணுமல்போனசம்பவங்களில் சம்பந்தப்பட்ட தனிநபர்களின் பெயர்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

ஆட்கள் காணுமல்போன சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் செய்துவரும் ஆணைக்குழு முன்னிலையில் இந்த பெயர் விபரங்கள் தெரிவிக்கப்பட்டன.

ஆணைக்குழுமுன் சாட்சியமளிக்க வந்தவர்களே இந்த பெயர் விபரங்களைத் தெரிவித்ததாக தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் சிலர் பொலிஸ் உத்தியோகத்தர்களாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களாவும் இருந்தவர்களெனத் தெரியவருகிறது.

ஆட்கள் காணுமல்போன சம்பவங்களில் சம்பந்தப்பட்ட சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் இன்னமும் அந்தப் பகுதியில் சேவையில் இருப்பதால் அவர்களது பெயர்விபரங்களை வெளியிட அஞ்சுவதாக பல சாட்சிகள் தெரிவித்தன.

சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் பதவி உயர்வுகளையும் பெற்றுள்ளார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழுவுக்கு இதுவரை அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுமார் பதினோராயிரம்முறைப்பாடுளில் இரண்டாயிரம்அனுராதபுரத்தையும் சுற்றியுள்ள பகுதிகளையும் சேர்ந்தவையாகும். அடுத்த சில தினங்களில் அனுராதபுரமாவட்டபிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் சாட்சியங்கள் பதிவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

# விறகுஎடுக்கச்சென்றவர்மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு

(பண்டத்தரிப்பு)

தேங்காய் எடுப்பதற்காகவும், விறகுவெட்டி எடுப்பதற்காகவும் சென்ற நபர் ஒருவர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமையன்று நண்பகல் தொட்டிலடியைச் சேர்ந்த குணரத்தினம் என்பவர் மற்றும் இருவருடன் பண்டத்தரிப்புப் பகுதிக்குச் சென்றதாகவும், பண்டத்தரிப்புப் பகுதிக்கு சமீபமாகவுள்ள காணி ஒன்றில் தேங்காய் எடுத்துக்கொண்டிருந்த வேளையில் மாதகல் பாணுவெட்டி அம்மன் கோவிலுக்குச் சமீபமாக பதுங்கியிருந்த இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இவர் இலக்கானதாகவும், இதுபற்றி அறியப்படுகின்றது. (72-ரி)

## முறைப்பாட்டுப் புத்தகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் நிவாரணப் பொருட்களை நிறுத்து வழங்குவதில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் சங்க உறுப்பினர்கள் அங்குள்ள முறைப்பாட்டுப் பதிவுப் புத்தகத்தில் அதன் விபரங்களை எழுத்து மூலமாக எழுதிப் புகார் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சங்க நிர்வாகம் ஒவ்வொரு கிளையிலும் முறைப்பாட்டுப் புத்தகம் வைப்பதென்று தீர்மானித்துள்ளது குறிப்பிடத்தக்கது -72

# அற்ப சலுகைகளுக்காக சுதந்திரத்தை இழக்கமாட்டோம்

தேவர் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களுக்குத் தமிழீழத்தைத் தவிர வேறு மார்க்கமில்லை. தமிழீழத்தை வென்றெடுப்பதற்கு ஆயுதம் ஏந்திப் போராடுவது அவசியமாகிறது என்று தந்தை செல்வா அன்று கூறியிருந்தார். இன்று எமது சுதந்திரப் போராட்டமும் அதனையேசுட்டிக்காட்டுகிறது.

தந்தை செல்வாவின் 18வது சிரார்த்ததின நிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றுகையில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவர் தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். நகரிலுள்ள தந்தை செல்வா நினைவாலயத்தில் நேற்றுமுன்தினம் காலை 8-30 மணிக்கு இந்நிகழ்வு திரு கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

திரு. தேவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; தந்தைசெல்வா பாராளுமன்ற கதிரைகளை விரும்பியவர் அல்ல. தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்று விரும்பியவர். சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரசைகள் என்பதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

நாங்கள் சமாதானத்தையே விரும்புகிறோம். சமாதானத்துக்காக எமது கதவுகள் எந்நேரமும் திறந்தபடியேயுள்ளன. நாம் சில கோரிக்கைகளைச் சிங்கள அரசிடம் முன்வைத்தோம். அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அற்ப சொற்ப சலுகைகளுக்காக எமது சுதந்திரத்தை நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம்.

நாம் ஒரு நீதியான நியாயமான போராட்டத்தை நடத்திவருகிறோம் எமது பிற்காலச் சந்ததியினர் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காகவே இப்போராட்டம் நடைபெற்று வருகிறது என்றார். (162-சி)

# மாதகலில் அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம்

(பண்டத்தரிப்பு)

மாதகலில்நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அடிக்கடி எல்லைப் பகுதி நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்துவருகின்றனர்,

நள்ளிரவு வேளையும் துப்பாக்கி பிரயோகம் செய்துவருவதால் பண்டத்தரிப்பு, சில்லாலை எல்லைப் பகுதிகளில் அண்மையில் சென்று வாழ்ந்து வரும் குடும்பங்கள் பெரும் பதற்றத்தின் மத்தியில் தமது வாழ்க்கையைக் க் வேண்டியுள்ளது முன்பு தாங்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்தவசதியற்ற இடங்களுக்கு மீண்டும் திரும்பி சென்று வசித்து வருவதாகவும் அறியப்படுகின்றது. 72-ரி

ராஜீவ் கொலை விசாரணை:

# ஆறு மத்திய அரசு அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடிவு

(புதுடில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணையின் ஒரு தொடர்ச்சியாக 6 மத்திய அரசு அதிகாரிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது.

மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஸ் பைலட், நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தமது எழுத்து மூலமான பதில் ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட இந்த அதிகாரிகள், தங்களது கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் உரிய கவனம் செலுத்தத் தவறிவிட்டனர் என்றும் அவர் கூறினார்.

திரு. ராஜீவ் காந்தியின் கொலை பற்றிய ஜெயின் கமிஷனின் விசாரணை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இறுதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கே ரி

# 28 றுவாண்டா அகதிகள் மூச்சுத்திணறி உயிரிழப்பு

(கிகாலி)

றுவாண்டாவில் 300 அகதிகளைச் சிறைச்சாலையின் ஒரு அறையில் வைக்க முயன்றபோது, 28 பேர் மூச்சுத் திணறல் காரணமாக உயிர் இழந்தனர்.

தெற்கு மாவட்ட நகரமான புற்றுருக்கு அருகே உள்ள ஒரு கிராமத்தில் இத்துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சென்ற ஆண்டுப் படுகொலைகளுக்கு உள்ளூர் நிர்வாகத்தினரின் தூண்டுதலே காரணம் என்று கிராமவாசிகள் குற்றம் சாட்டியுள்ளதல் அகதிகள் காவலில வைக்கப் பட்டனர்.

ஒரு லட்சம் அகதிகள். முகாமிலிருந்து தங்களது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிவிட்டனர் என்றும், ரூட்சி இன மக்கள் இவர்களைக் கண்டனம் செய்வதாகவும் உதவிப் பணியில் ஈடுபட்டிருப்போர் கூறுகின்றனர். கே ரி

நல்லூர் ... நூலகம்

# திருமலைத் துறைமுக கப்பல் தகர்ப்பு அரசுக்கு நாம் கொடுத்த தர்ம அடி!

## வீர வணக்கக் கூட்டத்தில் இளம்பரிதி!

(நெல்லியடி)

''எமது நிலையையும் மக்களின் நிலையையும் புரிந்து கொள்ள திருமலைத் துறைமுக கப்பல் தகர்ப்பு ஸ்ரீலங்கா அரசுக்கு நாம் கொடுத்த ஒரு தர்ம அடியாகும்.''

இவ்வாறு கடந்த திங்கட்கிழமை இரவு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற திருமலைத் துறைமுக கரும்புலித் தாக்குதல் வெற்றி வீர வணக்கக் கூட்டத்தில் உரையாற்றிய யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி தலைமையில் நடைபெற்ற இவ்வீர வணக்கக்கூட்டத்தில் திரு. இளம்பரிதி தொடர்ந்து பேசுகையில்:-

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் முதலில் கரும்புலித் தாக்குதலில் ஈடுபட்ட கப்டன் மில்லர். அவரைத் தொடர்ந்து கரும்புலி போர்க், கரும்புலி டம்போ, காந்தருபன், கொலின், வினோத் அதன்பின் பின்னர் எமது விடுதலைப் போராட்டத்தில் 39 கரும்புலிகள் வீரச் சாவைச் சந்தித்தனர். திருமலை கப்பல் தகர்ப்பில் கரும்புலிகளான நால்வருடன் சேர்ந்து இன்று 43 ஆக அதிகரித்து சாதனை படைத்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், அரசின் நிலை என்னவென்று மக்களுக்களுக்குத் தெரியும்.

ஸ்ரீலங்கா அரசு நம்பிக்கையாக, நம்பத்தகுந்தவகையில் எம்முடன் பேசவிரும்பவில்லை. நழுவல், வழுவல், இழுத்தடிப்புச் செய்தது இதனால் பேச்சுவார்த்தை முறிவடைந்தது.

எம் மக்கள் நிம்மதியாக வாழ நிரந்தர யுத்த நிறுத்தம், போக்குவரத்துப்பாதை திறப்பு, கடல்வலயத் தடை நீக்கம், பொருளாதாரத்தடை முற்றுகநீக்கல் ஆகியவற்றையேநாம்கேட்டோம். ஆனுல் இவை தமது தேசிய நலனுக்குப் பாதிப்பும் இராணுவ மேலாதிக்கத்திக்கு அச்சுறுத்தல் என்றும் ஸ்ரீலங்கா அரசு கூறியது நாம் கேட்பது சலுகையும் அல்ல உரிமையும் அல்ல உலகுக்கு உண்மை நிலைபுரியும். அரசு உத்தியோகபூர்வமாக அறிக்கைவிடவில்லை. இதனுல் பொருட்களும் வந்துசேரவில்லை.

இவைபற்றி தீர்மானிக்கப்படாவிட்டால் வேதனையான வேறு முடிவை எடுக்கநேரிடும் என தலைவர் அரசுக்கு அறிவித்தார்.

19ம் திகதி இரவு 12 மணி வரை அரசு குறிப்பிட்டமாதிரி எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. விரும்பவுமில்லை இதனுல் அடுத்த கணம் திருமலைத் துறைமுகத்தில் தாக்குதல் நடக்கின்றது.

சித்திரைப் புதுவருடத்தில் படையினர் லீவுகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டு படைகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டு தாக்குதல் பிரிவும் வேவு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

நாம் அரசுக்கு விளங்கப்படுத்தியும், வலியுறுத்தியும் பல கோரிக்கைகளை விடுத்தோம் அதனை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள்பிரமுகர் திரு. வே. பாலகுமாரன், திரு. இளையவன் உட்பட பலர் உரையாற்றினர். இறுதியாக கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(160-ரி)

## சாரணர்க்கு அழைப்பு

(திருநெல்வேலி)

மேதினத்தன்று சாரணர் சேவை தேவைப்படுவதால் யாழ் மாவட்ட சாரணர்கள், திரிசாரணர்கள் கடல்சாரணர்கள் அனைவரையும் அன்றைய தினம் பிற்பகல் 1-00மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் பூரண சீருடையுடன் கூடும்படி மாவட்ட ஆணையாளர் இ. மகேந்திரன் கேட்டுக் கொள்கின்ருர். 157-ரி

## திருவிழா

(அரியாலை)

மேதினத்தன்று யாழ். கத்தோலிக்க தொழிலாளர்கள் ஒன்று கூடி தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித சூசையப்பர் திருவிழாவைக் கொண்டவுள்ளனர் அன்றைய தினம் தொழிலாளர்களின் தொழில் உபகரணங்கள் ஆசீர் வதிக்கப்படவுள்ளது. 59

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிவன் கோவில் வருடாந்தஉற்சவத்தில் இன்று காலை ரதோற்சவமும் நாளை 29ம் திகதி தீர்த்தஉற்சவமும் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவன உற்சவமும் நடைபெறவுள்ளது. -வா

## பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழு தலைவர்

(கொழும்பு)

பேராசிரியர் எஸ், திலகரத்ன பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்ருர்.

இவர் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறை பேராசிரியராக கடமை புரிந்தவர். பேராசிரியர்சுரவீ மானியக் குழுவின் தலைவர் பதவியை இராஜினமா செய்ததைத் தொடர்ந்தே பேராசிரியர் திலரத்ன அவான் இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். ம-ரி

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரமசைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானுறு செல்வ சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வில் இன்று திரு. ஆறுதி முருகன் பெரியபுராணத தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

அறிமுக உரையை வல்வை கிராமசேவையாளர் திரு. சி. சிவபாலசிங்கம் நிகழ்த்துவார். -ரி

## வடக்கு கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மோதல்கள் தீவிரமடைந்து வருவதால் மீண்டுமொரு யுத்த நிறுத்தத்திற்கான சாத்தியம் குறைந்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. சி

## இராணுவதகவல்களே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கருதுவதாலேயே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்திருப்பதாகவும் 'தினமின' மேலும் தெரிவித்துள்ளது. இதனை மீறும் படையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இராணுவ இரகசியங்கள் பல பத்திரிகைகளில் வெளிவருவதால் படையினர் பல பிரச்னைகளை எதிர் நோக்கியிருப்பதுடன் கடும் விமர்சனங்களுக்கும் உள்ளாகிவந்துள்ளதும் தெரிந்ததே' ம-சி

## ★ ஸ்ரீ பாதக் கல்லூரி விவகாரம்:

# ம. மக்கள் முன்னணி கோரிக்கையை ஏற்க ஜனுதிபதி 'சந்திரிகா பின்னடிப்பு!

(கொழும்பு)

மலையக மக்களுக்கென ஜெர்மன் அரசு கட்டிக் கொடுத்த ஸ்ரீபாத 'கல்வியியல் கல்லூரியில் 100 வீதம் தமிழ் மாணவருக்கே அனுமதி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்ற ஜனுதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தற்போது பின்வாங்குவதாக மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த வி. ரி. தர்மலிங்கம் கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது: 8சிங்களக் கல்வியியல் கல்லூரிகள்ஏற்கனவே இயங்குகின்றன அம்பாறையில் முஸ்லிம்களுக்கென ஒரு கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது.

ஆனுல் மலையக மக்களுக்கென அமைக்கப்பட்ட இக்கல்லூரியில் 50 வீதம் மலையக மாணவர்களும், சிங்கள மாணவர்கள் 25 வீதமும், தமிழ் பேசுவோர் 25 வீதமும் கல்வி கற்க அனுமதிக்கப் போவதாக அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அறிவித்தது.

இந்நிலையில் இ. தொ. கா. வும் வேறு வழியின்றி அதனை ஏற்றுக்கொண்டது. ஆனுல் இக்கல்லூரியில் 100 வீதம் தமிழ் மாணவர்கள் கல்வி கற்பதற்கு வழிவகை மேற்கொள்ளப்படவேண்டும் என மலையக மக்கள் முன்னணி பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்பதற்கு முன்பும், பதவி ஏற்ற பின்பும் பேச்சுவார்த்தை நடத்திய போது ஜனுதிபதியும் அதனை ஏற்றுக்கொணடிருந்தார் எனினும், தற்போது அவர் இந்த உறுதிமொழியில் இருநது பின் வாங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

சரஸ்வதி பூசைக் காலத்தின் போது இறைச்சி, மீன் சமைத்தே ஆகவேண்டும் என சிங்கள மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனத அடுத்து இக்கல்லூரி இழுத்து மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது. கரி

# அகதி முகாம்களில் கிணறுகள் அமைப்பு

[மானிப்பாய்]

ஜேர்மன் ஜனநாயக குடியரசு திட்டத்தின் கீழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதி முகாம்களில் வசிக்கும் மக்களின் பாவனைக்கென குழாய்க் கிணறு திறந்த கிணறு என்பனவற்றை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது,

இதற்கான வேலைகள் எதிர் வரும் மே மாதம் 01-ந் திகதி முதல் நடைபெறவுள்ளதாக அந்நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், யூனிசெப் உதவித் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதி முகாம்களில் வசிக்கும் ஆண்டு 6க்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது. 71 ரி

## கடற்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் நேற்றுக் காலை 6-45 மணியளவில் பருத்தித்துறைக் கடற்பரப்பான பொலிகண்டிக கடலில் நிகழ்ந்துள்ளது.

பொலிகண்டியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் கதிர்காமநாதன் (வயது 35) என்னும் நான்கு பிள்ளைகளின் தந்தையே கடற்படைத் தாக்குதலில் காயமடைந்தவராவார். இவரது தொடையினுள்ளும், வயிற்றினுள்ளும் குண்டுகள் பாய்ந்ததால் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டார்.

கடற்படையினரின் தாக்குதலினுல் கரையில் நின்ற பல படகுகளும், வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

இதேவேளை மணற்காடு, கற்கோவளம் ஆகிய கடற்பரப்பில் நேற்றுக் காலை ரோந்து சென்ற கடற்படையினர் பீரங்கி வேட்டுக்களை சரமாரியாகத் தீர்த்தனர். இதனுல் கடலுக்குச் சென்ற மீனவர்கள் உடமைகளை கைவிட்டு கடலில் குதித்து கரை சேர்ந்தனர். இச்சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றது.

-160-51-சி

## பாரிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கம் இவ்வாறு மறுப்புத் தெரிவித்துள்ளது.

ஆனுல் ஆயுதக் கொள்வனவிற்கு பாதுகாப்பு உயர்மட்டக்குழு ரஷ்யா சென்றுள்ளதும் ஆயுத கொள்வனவிற்கு ஜனுதிபதி அனுமதி வழங்கியிருப்பதும் பாரிய தாக்குதல்களுக்கே என அவதானிகள் தெரிவித்துள்ளனர். கசி

## நவாலி

2-ம் பக்கத் தொடர்ச்சி

கள் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பின் இன்று வரை ஒரு பொருளுமே அன்பளிப்பாக வழங்கபபடவில்லை எனவும் குடியிருப்புவாசிகள் விசனத்துடன் தெரிவித்தனர். -101

## கொத்துரொட்டி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவின் கீழ் உடல் நலத்திற்கு ஒவ்வாத நிலைமைகளில் உணவை ஆக்கிருர்கள் என சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், பொது மக்கள் சுகாதாரத்திற்கு கேடுவிளைவிக்கும் நிலையில் தயாரிக்கும் விற்பனையாகும் உணவுப்பண்டங்களை உண்ண வேண்டாமெனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

-சி

## பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கணக்குப்பதியுனர் தரம் 11 இல் இருந்து தரம் 1 இற்கு பதவியுயர்த்துவதற்கான தகவுத் திறன் பரீட்சை யூன் மாதத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது. என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை திவகப் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு மாகாணசபையினுல் தெரிவு செய்யப்பட்ட 19 கிராம அலுவலர்களுக்கு மத்திய அரசாங்கத்தினுல் நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## இன்று

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 28-ம் திகதி வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. -72

## பொங்கல் விழா

(பருத்தித்துறை)

தும்பளை அருள்மிகு நெல்லண்டைப் பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த வெளிமடை உற்சவமும் பொங்கல் விழாவும் அடுதத மாதம் 5ம் திகதி வெள்ளிக்கிழமையும், மறுநாளான சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன. 52

## வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்ட தமது மீன்பிடி உபகரணங்களைத் தேடிக் கொண்டிருந்த மீனவர்களான இரத்தினசாமி சைருன் (18 வயது), துரைசிங்கம சிவலிங்கம் (வயது 23) ஆகிய இருவரையும அவர்கள் சென்ற பிளாஸ்ரிக் படகுடன் சுற்றி வளைத்துப் பிடித்து தமது படகுடன்கட்டியிழுத்துக் கொண்டு காங்கேசன்துறைப் பகுதிககு சென்றுள்ளனர் பின்னர் இவர்களின் நிலைபற்றி எதுவும் தெரியவரவில்லை.

இவர்களை மீட்டுத் தருமாறு வல்வை-பருத்தித்துறை மீனவர் சங்கங்கள் யாழ் அரச அதிபரையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரையும் கோரியுள்ளனர்.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்து மீனவரீ ஒருவர் காப்பாற்றப்பட்டு கடற்படையினரின் பாதுகாப்பில்உள்ளதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அவரின் விபரத்தை அறிவதிலும் மேற்படி சங்கங்கள் யாழ் அரச அதிபர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளன. 51

## புலிகளின் உக்கிர

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுக் காலை 5 30 மணியளவில 8 ஹெலிகொப்டர்களின் உதவியுடன் மேலதிக துருப்புகள் குவிக்கப்பட்டு கடும் விமானத்தாக்குதலின் மத்தியில் இராணுவத்தினர் முன்னேற முயன்றனர்.

இதேவேளை ஓமந்தை பகுதியிலிருந்து 48 மோட்டார் சைக்கிள்களின் உதவியுடன் மற்றுமொரு படையணி இறம்பைக்குளம் நோக்கி முன்னேற முயன்றது.

இவ் இரு அணிகளுக்கும் உதவியாக மூன்று புக்காரா விமானங்கள், ஐந்து ஹெலிகொப்டர்கள், இரு குண்டு வீச்சு விமானங்கள் கடும் தாக்குதலை நடத்தின.

இவ் இரு அணிகளையும் எதிர்த்து விடுதலைப் புலிகள் அணியினர் மூன்று மணிநேரம் தொடுத்த கனவேக உக்கிர தாக்குதலினுல் படையினர் பலத்த இழப்புகளுடன் சிதறியோடினர்

இதேவேளை இறம்பைக்குளம் பம்பைகேருகுளம், பனிச்சநீராவியடி போன்ற பகுதிகளில் மக்கள் குடியிருப்புகள்மீது விமான தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல்களும் சரமாரியாக நடாத்தப்பட்டன. கசி

# அகோர குண்டு வீச்சுக்களால் கிழக்கு காடுகள் தீப்பற்றின

[மட்டக்களப்பு]

கிழக்கில் காட்டுப்பகுதியில் கடந்த சில தினங்களாககுண்டு வீச்சு விமானங்கள் கடும் தாக்குதலை மேற்கொண்டு வருவதுடன் கடற்படையினர் கடற்பகுதியிலிருந்து பீரங்கித்தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர். இதனால் காடுகளில் பல இடங்களில் தீ பரவி வருவதாக தெவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் பல முகாம்கள் காடுகளிலேயே உள்ளதாகவும் அம்முகாம்களை இலக்கு வைத்தே விமானப்படையினரும், கடற்படையினரும் பலத்த தாக்குதலை நடாத்தி வருவதாகவும் இராணுவ தளபதி ஜெரி டி சில்வா தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்திலேயே மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ தாக்குதல் நடத்தப்படவேண்டுமென ஜனாதிபதி பணித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காட்டுப்பகுதியில் தினமும் பாரிய குண்டுச்சத்தங்கள்கேட்பதுடன் பல பகுதிகளிலும் காடுகள் தீப்பற்றி எரிவதாகவும் அப்பகுதிமக்கள் தெரிவித்துள்ளனர். [சி-க]

# புலிகள் தாக்குதல் 3 பொலிஸார் காயம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் மூன்று பொலிசார் காயமடைந்தனர் என்று படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

விடுதலைப் புலிகளுக்கு எதிராக தாக்குதல் நடவடிக்கையில் இறங்கியுள்ள விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் மீது புலிகள் தாக்கியபோதே மூன்று பொலிசார் காயமடைந்தனராம்.

இப்பொலிசாரின் தாக்குவல் நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறதெனவும் தெரிவிக்கப்படுகிறது -ம-சி

## வடபகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கருதப்படுகிறது.

எனினும் இலங்கை அரசு கோரும் நிதியுதவியை உதவி வழங்கும் நாடுகள் வழங்குமென்றே எதிர்பார்க்கப்படுகிறது. சி

# இராணுவம்-புலிகள் பல இடங்களில் மோதல்

(கொழும்பு)

திருமலை, மன்னார், புத்தளம் ஆகிய இடங்களில இராணுவத்தக்கும் புலிகளுக்குமிடையில் பல இடங்களில் மோதல்கள் நடைபெற்றுள்ளதாக இராணுவத்தலைமையகம் அறிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பள்ளிமுனையிலுள்ள இராணுவ முகாமையும், திருமலையிலுள்ள ஒரு இராணுவ முகாமையும் விடுதலைப்புலிகள் மோட்டார் குண்டுகளாலும், ரொக்கெட்டுகளாலும் தாக்கியதாகவும் இராணுவம் அறிவித்தது.

இதேநேரம் புத்தளம் மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள வில்பத்துக்காட்டுப் பிரதேசத்திலும் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தக்குமிடையில் கடந்த திங்சட்கிழமை பெரும்மோதல்கள் நடைபெற்றதாகவும், இராணுவத்துக்கு உதவியாககுண்டு வீச்சு விமானங்களும், ஹெலிகளும் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி-சி)

# ஆட்டோ சங்கருக்கு நேற்று மரண தண்டனை நிறைவேற்றம்

(சென்னை)

தமிழகத்தில் ஆறுபேரை படுகொலை செய்த ஆட்டோ சங்கருக்கு சேலம் மத்திய சிறையில் நேற்றுக் காலை 5-40 மணியளவில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இந்த வழக்கில் செங்கல்பட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் ஆட்டோ சங்கருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சென்னை உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் ஆட்டோ சங்கருக்கு தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. ஜனாதிபதியும் ஆட்டோ சங்கரின் கருணை மனுவை நிராகரித்ததை அடுத்து இந்தத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஆட்டோ சங்கரின் உடல் நேற்றுக் காலை 7 மணிக்கு உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வழக்கில் மற்றொரு குற்றவாளியான ஆட்டோ சங்கரின் மைத்துனன் எல்வினுக்கு இன்று மதுரை மத்திய சிறையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றுமாறும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ரி-சி

# ரணிலின் பாதுகாப்பு மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்க்கடசித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் பாதுசாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் மீண்டும் மோதல்கள் வெடித்ததைத் தொடர்ந்து கொழுமபில் அரசியல் தலைவர்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாக திரு.ரணில்விக்கிரமசிங்காவின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் திரு ரணில் விக்கிரமசிங்காவிற்கான பாதுகாப்பு போதிய அளவில் இல்லை என ஐ. தே. கவினர் அரசுமீது தொடர்ந்தும் குற்றச்சாட்டி வந்தனர். இதை அடுத்தே இவரது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. -சி

## படையினரின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளனர். சடலங்களை அவ்விடத்தில் போட்டு விட்டு படையினர் சென்றுவிட்டனர். (க-சி)

# ஜெயலலிதா தாக்கல் செய்த வழக்கு நேற்று தள்ளுபடியானது

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாகவழக்குதொடுக்கஜனதாக் கட்சித்தலைவர் டாக்டர்சுப்பிரமணிசுவாமிக்குதமிழகஆளுநர் சென்னாரெட்டி அனுமதி வழங்கியமையை எதிர்த்து முதல்வர் செல்வி ஜெயலலிதா தாக்கல் செய்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ளது.

மாநில முதல்வருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் பொதுமக்களது நலன்கள்பாதிக்கப்படும் என்ற செல்விஜெயலலிதாவின் வாதத்தையும் நீதிபதிகள் திரு சிறினிவாசன், திரு. சுப்பிரமணியம் ஆகியோர் தள்ளுபடி செய்துள்ளனர்.

நீதிமன்றத் தீர்ப்பையடுத்து டாக்டர் சுப்பிரமணியசுவாமி கருத்து வெளியிடுகையில்:- முதல்வர் ஜெயலலிதா உடனடியாக பதவி விலகவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதேவேளை தமிழகத்தில் தற்போது ஜெயலலிதாவின் அரசுக்கு எதிராக பல தரப்பிலுமிருந்து கடும் எதிர்ப்புக்கள் எழுந்து வருகிறது. (க-சி)

## 2 தமிழ்

மேலும் தெரிவித்தது.

இதேவேளை கொழும்பில் தினமும் பெருமளவு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ம-சி

# சந்திரிகா-மித்ரோன் பாரிஸில் சந்திப்பு

(பாரிஸ்)

பாரிஸில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிற்காக பிரான்சுக்கு சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி திருமதி சந்திரிகா பிரான்ஸ் ஜனாதிபதி மித்திரோனைசந்தித்து உரையாடியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியை பிரான்ஸ் ஜனாதிபதி ஊராணுவ அணிவகுப்பு மாரியாதை வழங்கி வரவேற்றார். இரு ஜனாதிபதிகளும் சுமார் ஒரு மணித்தியாலம் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இதேவேளை இலங்கக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு இன்று இரண்டாவது நாளாக பாரிஸில் நடைபெவுள்ளது. -வி-சி

# க. பொ. த. (சாதாரணம்) தனிப்பட்ட மாணவர்களின் முடிவுகள் வரவில்லை

(வடமராட்சி)

யாழ். மாவட்டததைச் சேர்ந்த க. பொ. த. (சா/தர) தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை முடிவுகள் இன்னும் கிடைக்காதால் பரீடசார்த்திகள் தம்து படிப்பைத் தொடர முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

கடந்த புதுவருடப்பிறப்பன்று பாடசாலை பரீட்சார்த்திகளின் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின.

மேலும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் கொழும்பில் வெளியாகியபோதும் இதுவரை யாழ். மாவட்டத்திற்கான பரீட்சார்த்திகளுக்கு முடிவுகள் கிடைக்கவில்லை. -51-சி

# மரண அறிவித்தல்

## தேவசகாயம் கந்தசாமி இரத்தினராசா

(கொழும்பு கொமர்ஷல் வங்கி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)

கொழும்பைப் பிறப்பிடமாகவும், மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் கந்தசாமி இரத்தினராசா (கொழும்பு கொமர்ஷல் வங்கி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) நேற்று வியாழக்கிழமை காலமானார். இவர் ஞானமணியின் அன்புக் கணவரும், பெஞ்சமின் இராசரத்தினம் (உதவி ஆசிரியர் ஈழநாடு), ஜோன் செல்வரத்தினம் (பிரான்ஸ்), கமிலஸ் கனகரத்தினம் (கொழும்பு, பெனடிக்ற் நவரத்தினம் (பிரான்ஸ்) ஜீவராணி ஹென்றி (கொழும்பு). பேர்ள்ஸ் மோகன் (பிரான்ஸ்), சார்ள்ஸ் குணரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னம்மா இராசரத்தினத்தின் (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்பு மாமனாரும், லாவண்யா, ரவிவர்மன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (28-04-95) காலை 11.00 மணியளவில் மீசாலை மேற்கு ''லக்ஷ்மி வாசா'' வில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பெஞ்சமின் இராசரத்தினம்

(மகன்)

மீசாலை மேற்கு. (ஏ-4901)

## வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்ததாக இராணுவ நடவடிக்கை தலைமைச் செயலகம் தெரிவித்தது.

பலமணிநேரம் நடைபெற்ற இந்த மோதலில் பெருமளவு படையினர் விமானப் படையின் உதவியுடன் கடும் தாக்குதலை நடாத்தியதாகவும் அச்செயலகம் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை அதிகமாயிருக்கலாமென ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. -வி-க-சி

## வடபகுதி மீதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கவேண்டும். இதன்மூலம் அரசு இனப்பிரச்னைக்கு எப்படியானதொரு தீர்வை காண முயல்கிறது என்பதைதெரிந்து கொள்ளமுடியுமெனவும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அரசு தனது தீர்வுத்திட்டத்தை வெளியிட வேண்டுமென பல தரப்பும் வலியுறுத்தி வருகின்றன. (ம-சி)

# அரசு புலிகளுக்கிடையில் 4 வார யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும்

[கொழும்பு]

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் நான்குவார யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டுமென 'தேசிய சமாதான சபை' இருதரப்பிற்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இக்கால எல்லைக்குள் ஆக்கபூர்வ யுத்த நிறுத்த உடன்படிக்கையை இரு தரப்பும் மேற்கொள்ளலாமெனவும் அந்த சபை கூறியுள்ளது.

இந்த யுத்த நிறுத்தத்தை கண்காணிப்பதற்காக வெளிநாட்டவர்களும் பங்குகொள்ளும் குழுக்களை நியமிக்கலாம். இதன் மூலம் மீண்டும் ஆரம்பமாகியுள்ள மோதலை தவிர்க்க முடியும் எனவும் கூறியுள்ளது.

இதேவேளை இதுவரையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த யுத்த தவிர்ப்பு ஒப்பந்தம் மீறப்பட்டதால் எழுந்துள்ள நிலைமை குறித்து இனங்களுக்கிடையேயான நீதிக்கும் சமாதானத்திற்குமான இயக்கமும் கவலை தெரிவித்துள்ளது. க சி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613.